திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இந்த பவுண்டன் பேனா நிப்பு செய்யும் வேலையை சாத்தூரில் ஒரு குடிசைத் தொழிலாக, 5 பேர், 10 பேர் சேர்ந்து வீடுகளில் வைத்துச் செய்கிறார்கள். இது நம்முடைய மாநிலம் தவிர வெளி மாநிலங்களுக்கு, கல்கத்தா போன்ற மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. வெளி மாநிலத்தவர்களும் இதை வாங்குகிறார்கள். வரி போடுவதன் காரணமாக விலை கூடும். அதனால் தொழில் பாதிக்கும். இது ஒரு குடிசைத் தொழிலாக இருப்பதால்—95,000 ரூபாய்தான் வருமானம் என்று சொல்கிறார்கள்—முழுவதுமாக வரி விலக்கு அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே அரசு ஆலோசிக்கும்.

தமிழக அரசின் முத்திரைச் சின்னம்

*வினா எண் 5: திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு முத்திரைச் சின்னம் திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில் கோபுர வடிவமைப்பைக் கொண்டுள்ளது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில்; இது குறித்து கோபுரத்தின் அருகே கல்வெட்டு ஒன்று ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) தமிழக அரசு முத்திரைச் சின்னம் திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் கோபுரத்தின் சாயலைக் கொண்டுள்ளதே தவிர, மேற்கொண்ட கோயில் கோபுர வடிவத்தை கொண்டு தமிழக அரசின் முத்திரைச் சின்னம் ஏற்படுத்தப்படவில்லை.

(ஆ) எனவே அடுத்த கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, ஆண்டாள் கோயில் கோபுரத்தை மாடலாகக் கொண்டதாக இல்லை என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். அப்படியானால் எந்த கோபுரத்தை மாடலாகக் கொண்டது? இதே சட்டமன்றத்தில் கேள்வி கேட்கும்போது மாண்புமிகு அமைச்சர் திரு. காளிமுத்து அவர்கள் இந்த கோயிலை மாடலாகக் கொண்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது மாறுபட்ட கருத்து வந்திருக்கிறது. இது பற்றி விளக்குவார்களா?

1980 ஜூலை 15]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, ஆண்டாள் கோயிலுள்ள வடபத்ர சயனர் கோபுரத்தின் சாயலை ஒத்துள்ளது என்றும், அதை அப்படியே மறு பதிப்பாக எடுத்துக் கொள்ளவில்லை என்றும் பொதுத் துறையிலிருந்து தகவல் தந்திருக்கிறார்கள். அதற்கு மேலே இப்போது தகவல் இல்லை.

[முற்பகல் 9.20]

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, நமது இந்திய அரசின் சின்னமாக விளங்குவது அசோக ஸ்தூபியாகும். அதை குழந்தைகள், இளைஞர்கள் அனைவரும் அறிவர். ஆனால், தமிழ்நாட்டின் முத்திரைச் சின்னம் எதுவென்று தெரியாமல் நாம் இருப்பதை எண்ணிப்பார்க்கின்றபோது மிகவும் பாவமான நிலையில் இருக்கின்றோம். ஆகவே, அதை ஆராய்ந்து அது எந்தக் கோயிலின் சின்னம் என்பதை அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, இந்திய அரசினுடைய சின்னம் அசோகனுடைய முத்திரைச் சின்னம். இந்தியா முழுவதற்கும் ஒரே சின்னம்தான், அசோகனும் ஒருவன்தான். ஆனால், சிறப்புமிக்க கோவில்கள் நிறைந்த தமிழகத்தின் சிறப்பைக் காட்டுவதற்காகத்தான் கோபுரச் சின்னத்தைப் பொறித்திருக்கிறோம். அது ஆண்டாள் கோயில் கோபுர உருவமாகத்தான் இருக்கவேண்டும் என்பதல்ல. பொதுவாக கோபுரம் பொறிக்கப்பட்டிருக்கின்றது.

திரு. ப. நெடுமாறன்: தலைவரவர்களே, நம்முடைய அரசின் சின்னம் ஆண்டாள் கோயில் கோபுரச் சின்னம் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வாறு சொல்லவில்லை. பொதுவாக ஒரு கோபுரம் பொறிக்கப்பட்டிருக்கின்றது என்றுதான் சொன்னார்கள்.

திரு. ப. நெடுமாறன்: தலைவரவர்களே, நான் என்னுடைய தவறைத் திருத்திக்கொள்கிறேன். ஆனால். எனக்கு எப்படி நினைவு என்றால் மதுரையிலே இருக்கின்ற மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் சின்னத்தைத்தான் அரசாங்கம் தன்னுடைய முத்திரையாக ஆக்கியது என்பதுதான். அப்படித்தான் எனக்கு நினைவு. ஆகவே, அமைச்சரவர்கள் அதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்களுடைய கேள்விக்கு மாண்புமிகு உறுப்பினர்

[1980 ஜூலை 15

திரு. நெடுமாறன் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். இந்தச் சிக்கல் வரக்கூடாது என்பதற்காகத்தான் தமிழ்நாட்டிலுள்ள ஆலயக் கோபுரத்தின் உருவம் பொறிக்கப்பட்டிருக்கின்றது என்ற வகையில் அரசு எடுத்துக்கொண்டிருக்கின்றது.

திரு. ஜே. எஸ். இராசு: சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஆண்டவனை ஒப்புக்கொள்கிறவர்களும் இருக்கின்றார்கள். மறுக்கின்றவர்களும் இருக்கின்றார்கள். ஆகவே பொதுவாக இருக்கின்ற அரசாங்கத்தின் சின்னமாக பொது சின்னம் ஒன்று அமைகின்ற வகையில், இந்தக் கோயில் கோபுர சின்னத்தை மாற்றி வேறு புது சின்னம் ஒன்றை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, கோபுரச் சின்னம் என்பதை ஆண்டவனுடைய சின்னம் என்று ஏற்றுக் கொள்ளத் தேவையில்லை. உலகத்திலேயே மிகச் சிறந்த சிற்பிகள் தமிழகத்திலே உள்ளவர்கள் என்ற வகையிலேயும், கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே கட்டிடக் கலையில் சிறந்தவர்களாகவும் அவர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதையும் எடுத்துக் காட்டுகின்ற ஒரு சின்னம் தான் கோபுரச் சின்னம். ஒருவேளை ஆண்டவன் மீது நம்பிக்கை யில்லாதவர்கள் வேண்டுமானால் இப்படி எடுத்துக்கொள்ளலாம். ஆண்டவன் மீது நம்பிக்கை உள்ளவர்கள் தாம் வணங்குகின்ற ஆலயத்தின் கோபுரம் என்று எடுத்துக்கொள்ளலாம்.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கோயில் சின்னத்தைப் பற்றிக் கொடுத்த விளக்கம் மிகச் சிறப்பானது. நம்முடைய தமிழகத்தின் சிற்பக் கலையையும், கட்டடக் கலையையும் எடுத்துக் காட்டுகின்ற வகையிலேதான் கோபுரத்தைப் பயன்படுத்தி யிருப்பதாகக் கூறினார்கள். ஆனால், மன்னார்குடி ராஜகோபால சுவாமி கோபுரம்தான் பெரிய கோபுரம். அது மதுரையை விடப் பெரிய கோபுரம். மதுரையில் தமிழ் வளர்ந்திருக்கலாம். ஆனால், மன்னார்குடி ராஜகோபால சுவாமி கோபுரம்தான் மிகப் பெரிய கோபுரம். ஆகவே, அதைத்தான் தமிழக அரசு முத்திரையிலே போட்டிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். ஆகவே, இது குறித்து அமைச்சரவர்கள் என்ன விளக்கம் தருகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவரவர்களே, யார் யார் எந்தெந்தக் கோபுரம் என்று அவரவர்கள் மனதில் எண்ணிக்கொள்கிறார்களோ அப்படி எண்ணிக்கொள்ளலாம். பொதுவாக கோபுரச் சின்னம் பொறிக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் அதை

1980 ஜூலை 15]

மன்னார்குடி ராஜகோபால சுவாமி கோயில் கோபுரம் என்று எடுத்துக்கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் அதை திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் கோபுரத்தின் சின்னமாக எண்ணிக்கொள்ளலாம். திரு. நெடுமாறன் அவர்கள் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் கோபுரமாக எண்ணிக்கொள்ளலாம்.

சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியம்

*குறுகியகால வினா எண் 14 திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுதந்திரப் போராட்ட வீரர்களின் பென்ஷன் தொகையை அதிகரிக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:—(அ) & (ஆ) மத்திய ஓய்வூதியம் பெறாமல் மாநில ஓய்வூதியம் மட்டுமே பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர்களின் மாதாந்திர ஓய்வூதியத்தை ரூ. 75—ல் இருந்து ரூ. 100 ஆக கடந்த ஆண்டுதான், அதாவது 1—4—1979 முதல் இந்த அரசு உயர்த்தி உள்ளது. அதனை மேலும் உயர்த்திடும் செயற் குறிப்பேதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவரவர்களே, நாட்டின் சுதந்திரத்திற்காக பல ஆண்டுகள் சிறையில் இருந்து துன்பங்களை அனுபவித்தவர்கள் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள். அவர்களுடைய பிறந்த நாளாகிய இன்று, இந்தியாவின் விடுதலைக்காக சொத்து சுகத்தை இழந்து, தியாகம் செய்த சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு இப்போது தரப்பட்டு வருகின்ற பென்ஷன் தொகையின் அளவை உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா? அதுமட்டுமல்லாமல், சுதந்திரப் போராட்ட வீரர்களின் குடும்பத்திலே ஒருவருக்காவது கட்டாயமாக வேலைவாய்ப்பு கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சுதந்தரப் போராட்ட வீரர்களுக்கு ஓய்வு ஊதியம் வழங்குகிற திட்டம் அவ்வப் போது மாற்றப்பட்டு, உயர்த்தப்பட்டு வந்திருக்கிறது. தமிழக அரசைப் பொறுத்தவரையில் 1—10—66 முதல் இந்தத் திட்டம் நடைமுறைக்கும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மூன்று மாதகால சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை